பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 190 நாள் : 29.10.2024

**சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான 2025-ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான வரைவு வாக்காளர் பட்டியலினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.எம்.பிருதிவிராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று வெளியிட்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான 2025-ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான வரைவு வாக்காளர் பட்டியலினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.எம்.பிருதிவிராஜ், இ.ஆ.ப., அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இன்று (29.10.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 01.01.2025-ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, 2025-ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இச்சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் இன்று (29.10.2024) வெளியிடப்பட்டது. மேற்படி வரைவு வாக்காளர் பட்டியல், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தார்களது பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா அல்லது இல்லையா என்பது குறித்து சரிபார்த்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் (01.01.2007-ஆம் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள் மற்றும் 17 வயது நிரம்பி 18 வயது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளவர்களும்) **படிவம்**-6 ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக **படிவம்**-7 ஐ பூர்த்தி செய்தும், சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய **படிவம்**-8 ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் **29.10.2024** முதல் **28.11.2024** முடிய உள்ள காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்,

மேலும் **16.11.2024, 17.11.2024, 23.11.2024** மற்றும் **24.11.2024** (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. அந்த முகாம் நாட்களையும் படிவங்கள் 6, 6A, 7 மற்றும் 8 வழங்க பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள் இணையதளம் மூலமாகவும், தங்களுடைய பெயர்கள் சேர்த்தல் , நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம். (இணையதள முகவரி – http://voters.eci.gov.in/)

சென்னை மாவட்டத்தில் **3,718** வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இன்று வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. <u>அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் **284** வாக்குச்சாவடிகளும்</u>, <u>குறைந்தபட்சமாக எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் **169** வாக்குச்சாவடிகளும்</u> அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு, ஏற்கனவே **27.03.2024** அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி, ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை **19,28,461,** பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை **19,95,484,** இதர வாக்காளர்களின் எண்ணிக்கை **1,199,** மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை **39,25,144** ஆகும்.

நடைபெற்று முடிந்த தொடர் திருத்தத்தில் சென்னை மாவட்டத்தில் **19,41,271** ஆண் வாக்காளர்கள், **20,09,975** பெண் வாக்காளர்கள் மற்றும் **1,252** இதர வாக்காளர்கள் என மொத்தம் **39,52,498** வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

மேலும் **25,628** ஆண் வாக்காளர்கள், **27,669** பெண் வாக்காளர்கள் மற்றும் **62** இதர வாக்காளர்கள் என மொத்தம் **53,359** வாக்காளர்களின் பெயர்கள் புதியதாக பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் **12,818** ஆண் வாக்காளர்கள், **13,178** பெண் வாக்காளர்கள் மற்றும் **9** இதர வாக்காளர்கள் என மொத்தம் **26,005** வாக்காளர்களின் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலின்படி சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சட்ட மன்றத் தொகுதி வாரியாக கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | சட்டமன்றத் தொகுதிகளின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மூன்றாம் பாலின வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | 1,17,930 | 1,26,788 | 120 | 2,44,838 |
| 2. | எண்.12. பெரம்பூர் | 1,41,346 | 1,46,421 | 87 | 2,87,854 |
| 3. | எண்.13. கொளத்தூர் | 1,39,011 | 1,45,743 | 72 | 2,84,826 |
| 4. | எண்.14. வில்லிவாக்கம் | 1,17,827 | 1,22,564 | 62 | 2,40,453 |
| 5. | எண்.15. திரு.வி.க.நகர் | 1,06,203 | 1,12,445 | 70 | 2,18,718 |
| 6. | எண்.16. எழும்பூர் | 95,460 | 97,287 | 70 | 1,92,817 |
| 7. | எண்.17. ராயபுரம் | 94,888 | 99,264 | 72 | 1,94,224 |
| 8. | எண்.18. துறைமுகம் | 91,249 | 84,883 | 65 | 1,76,197 |
| 9. | எண்.19. சேப்பாக்கம் / திருவல்லிக்கேணி | 1,15,280 | 1,19,445 | 63 | 2,34,788 |
| 10. | எண்.20. ஆயிரம் விளக்கு | 1,15,155 | 1,20,588 | 110 | 2,35,853 |
| 11. | எண்.21. அண்ணா நகர் | 1,35,364 | 1,41,033 | 104 | 2,76,501 |
| 12. | எண்.22. விருகம்பாக்கம் | 1,40,256 | 1,41,903 | 93 | 2,82,252 |
| 13. | எண்.23. சைதாப்பேட்டை | 1,32,905 | 1,37,732 | 86 | 2,70,723 |
| 14. | எண்.24. தியாகராயநகர் | 1,15,084 | 1,18,307 | 50 | 2,33,441 |
| 15. | எண்.25. மயிலாப்பூர் | 1,28,912 | 1,37,142 | 47 | 2,66,101 |
| 16. | எண்.26. வேளச்சேரி | 1,54,401 | 1,58,430 | 81 | 3,12,912 |
| | மொத்தம் | 19,41,271 | 20,09,975 | 1,252 | 39,52,498 |

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக **எண்.18. துறைமுகம்** சட்டமன்றத் தொகுதியில் **1,76,197** வாக்காளர்களும், அதிகபட்சமாக **எண்.26. வேளச்சேரி** சட்டமன்றத் தொகுதியில் **3,12,912** வாக்காளர்களும் உள்ளனர்.

ஜனநாயகத்தினை வலுப்படுத்த, தகுதியுள்ள அனைத்து பொதுமக்களும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற ஏதுவாக வரைவு வாக்காளர் பட்டியலினை பார்வையிட்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.பி.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**